## வெற்றிகளும் – தோல்விகளும் நிரந்தரமல்ல! முதல்வரின் கரூர் பேச்சு –

# முன்னாள் முதல்வர் பற்றிப் பயன்படுத்திய சொற்கல் முதல்வரின் தகுதிக்கு உகந்ததல்ல!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூலை 12-

முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப்பற்றி, இந்நாள் முதலமைச்சர் நேற்று (10.7.2026) கரூரில் பேசும்போது பயன்படுத்திய சொற்கள், ஒரு முதலமைச்சர் என்ற தகுதிக்கு உகந்ததல்ல; வெற்றிகளும், தோல்விகளும் நிரந்தரமல்ல என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

**பொதுநிலையில் உள்ள எவராலும்கூட ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை!**

மிகப்பெரிய சோகம் நடைபெற்ற கரூருக்கு, முதலமைச்சரான பின்பு நேற்று (10.7.2026) திரு. ஜோசப் விஜய் அவர்கள் சென்று, அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில், சில உதவிகளையும் - பணி நியமனங்களையும் வழங்கியதால், அது அரசால் ஏற்பாடு செய்யப்பட்டதாக, அரசாங்க நிகழ்ச்சியாகவே கருதப்பட வேண்டிய நிகழ்ச்சி என்பது ஒருபுறம் இருந்தாலும், அதில் பேசிய முதலமைச்சரின் பேச்சும் (அது தயாரிக்கப்பட்ட உரை என்ற நிலையிலும்கூட), அதன் மொழி நடையும், அரசியல் அறம் சார்ந்ததாகவோ, பண்பு நலனையொட்டிய சொற்கோவையாகவோ இல்லாதது, அரசியலுக்கு அப்பாற்பட்ட பொதுநிலையில் உள்ள எவராலும்கூட ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்பது, வேதனை மிகுதியுடன் கண்டனம் தெரிவிக்கக் கூடிய ஒன்றாகும்.

**முதலமைச்சர் பதவியில் உள்ள ஒருவரின் தகுதிக்குரிய மொழிகள் ஆகாது!**

தி.மு.க.வின் தேர்தல் தோல்வி பற்றியோ, முதலமைச்சராக இருந்தவரின் தோல்வி குறித்தோ அவருக்கு விமர்சிக்க உரிமை இருக்கலாம். ஆனால், அதற்கு அவர் பயன்படுத்திய தரக்குறைவான சொற்கள் "ஒரு 5 நிமிடம் பேசியவுடனே, கொளத்தூரில் கொத்து பரோட்டா போட்டுவிட்டார்கள்'' என்பது பகுத்தறிவுள்ள - பண்பாடு புரிந்தவர்கள் எவராலும் நியாயப்படுத்த முடியாத ஒன்று; முதலமைச்சர் பதவியில் உள்ள ஒருவரின் தகுதிக்குரிய மொழிகள் ஆகாது!

திரைப்படங்களில் அந்த வசனங்களுக்குக் கைதட்டல் கிடைக்கலாம்; உண்மை ஜனநாயகத் தத்துவத்தைப் புரிந்த எவரையும் முகம் சுளிக்க வைக்கும் வசை மொழிகளாகும்.

மக்களாட்சியில், தேர்தலில் முதலமைச்சர்களாக இருந்தவர்களும், மக்கள் தலைவர்களாக மதிக்கப்பட்டவர்களும்கூட தோல்வி அடைவது அதன் விசித்திரங்களில் ஒன்று.

**தோல்விபற்றி விமர்சித்தபோதுகூட – மொழிகளில் கண்ணியம் காத்தனர்!**

சாதனைக்கு மேல் சாதனை செய்த, ஊழல் செய்யாத 'ஏழைப் பங்காளர்' என்று அழைக்கப்பட்ட கல்வி வள்ளல் காமராசர் தோற்கடிக்கப்படவில்லையா?

பேரறிஞர் அண்ணா தேர்தலில் (காஞ்சியில்) தோற்கடிக்கப்படவில்லையா?

ஏன், திருமதி இந்திரா காந்தி தேர்தலில் தோற்கடிக்கப்படவில்லையா?

வெற்றி பெற்ற கட்சித் தலைவர்களும், தனிப்பட்ட முறையில் வருந்தியவர்களும், அவர்களது தோல்விபற்றி விமர்சித்த போதுகூட - மொழிகளில் கண்ணியம் காத்தனரே!

ஆட்சிக்கு வந்த பிறகு, முதலமைச்சர் என்பவர், அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டிய கடமைக்குரியவர்.

'திராவிட மாடல்' ஆட்சியின் திட்டங்கள் பலவற்றை - முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் த.வெ.க. ஆட்சி பின்பற்றித் தீர வேண்டிய கட்டாயத்தில் இருப்பது எதைக் காட்டுகிறது?

முன்னாள் முதலமைச்சரின் தோல்வியை விமர்சிக்க அவருக்கு உரிமை உண்டு. ஆனால், அது தரமற்றதாகவும், அருவருப்புக்குரியதாகவும் இருக்கலாமா?

இப்படியெல்லாம் அரை நூற்றாண்டுப் பொதுவாழ்வுக்கு உரியவரான மானமிகு முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இழுக்கு ஏற்படுத்திட முடியாது எவராலும்! இது எதிர்விளைவைத்தான் ஏற்படுத்தும்.

**வெற்றிகளும், தோல்விகளும் எவருக்கும் நிரந்தரம் அல்ல!**

வெற்றிகளும், தோல்விகளும் எவருக்கும் நிரந்தரம் அல்ல; காலச் சூழல் அதைத் தொடர்ந்து நிரூபித்துக் கொண்டே வந்துள்ளது. இனியும் வரும்.

"பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்" (குறள் 191)

"கேட்பவர் பலரும் வெறுத்துச் சினங்கொள்ளும்படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லிக் கொண்டே இருப்பவன், பிறர் எல்லோராலும், எப்பொழுதும் எள்ளி நகையாடப்படவே செய்வான்."

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## 15 ஆண்டுகள் முதல்வராகவும் 15 ஆண்டுகள் பிரதமராக இருந்தும்

# ஊழலின்றி நாட்டை ஆள முடியாத மோடி வெளிநாட்டில் பொழுதை கழிக்கிறார்!

## நார்வே நாட்டு பெண் செய்தியாளரின் சரமாரி கேள்வியால் பரபரப்பு!

புதுடெல்லி, ஜூலை 11-

ஒன்றிய பிரதமர் மோடியிடம் பத்திரிகை சுதந்திரம் குறித்து கேள்வி எழுப்பிய நார்வே பெண் பத்திரிகையாளரின் சமூக வலைதள பதிவுகள் இந்தியாவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த மே மாதத்தில் நார்வே நாட்டின் ஒஸ்லோ நகரில் நடந்த இந்தியா-நார்வே உச்சி மாநாட்டின் போது, அங்கு வருகை தந்த இந்திய பிரதமர் மோடியிடம் நார்வே நாட்டைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் ஹெல் லிங் ஸ்வென் சன் பத்திரிகை சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் குறித்து கேள்வி எழுப்பினார். உலகிலேயே மிக உயர்ந்த பத்திரிகை சுதந்திரம் கொண்ட நார்வே நாட்டின் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு ஏன் பதிலளிக்க மறுக்கிறீர்கள் என்று அவர் கேட்டார். உலக பத்திரிகை சுதந்திர குறியீட்டில் 180 நாடுகளில் நார்வே 1வது இடத்திலும், இந்தியா 157வது இடத்திலும் உள்ளதை சுட்டிக்காட்டி அவர் கேட்ட இந்த கேள்வியை பிரதமர் மோடி புறக்கணித்து விட்டு அங்கிருந்து சென்றார். அதே நாளில் ஒன்றிய வெளியுறவு அமைச்சகம் பிற பத்திரிகையாளர்களுடன் இவரையும் அழைத்து இந்தியாவின் பண்டைய கலாசாரம் குறித்து விளக்கம் அளித்தது. இந்த சம்பவத்தை தொடர்ந்து, பிரதமர் மோடியின் ஆதரவாளர்கள் அந்தபெண் பத்திரிகையாளரை வெளிநாட்டு உளவுத்துறை முகவர் என்றும், முட்டாள் பெண் என்றும் சமூகவலைதளங்களில் கடுமையாக விமர்சித்து மிரட்டல் விடுத்தனர்.

**மக்கள் வரிப்பணத்தில் மாம்பழம் சாப்பிடுகிறார்கள்!**

தற்போது இந்த பெண் பத்திரிகையாளர் ஹெல் லிங் ஸ்வென்சன் இந்தியாவின் அரசியல் மற் றும் சமூக நிலவரங்களை சமூகவலைதளங்களில் தொடர்ந்து கண்காணித்து காரசாரமான கருத்துக் களை பதிவிட்டு வருகிறார். பிரதமர் மோடியின் சமீ பத்திய ஆஸ்திரேலிய பய ணத்தை விமர்சித்து அவர், 'பிரதமர் மோடி இந்தியா மற்றும் வெளிநாடுகளில் சுற்றி வருவதை விரும்புகிறார். அவர் நினைத்திருந்தால் ஆஸ்திரேலியாவில் உள்ள அரசு பள்ளிகளை பார்வையிட்டு, அங்கு அரசு வழங்கும் தரமான இலவச கல்வி முறை மற்றும் தொழில்நுட்ப கற்பித் தல் முறைகளை பார்த் திருக்கலாம். ஆனால் எனக்கு என்ன கவலை?' என்று பதிவிட்டுள்ளார். மேலும், 'இந்த வாரத்தில் பெய்த கன மழையால் நடந்த விபத்துக்களில் 23 பேர் உயிரிழந்த ஸ்மார்ட் சிட்டியான சூரத் நகரம் வெள்ளத்தில் மூழ்கியிருந்த போது, பிரதமர் வெளி நாட்டில் நடன நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருக்கிறார்; 15 ஆண்டுகள் முதல்வ ராகவும் 15 ஆண்டுகள் பிரதமராகவும் இருந்தும் சொந்த ஊரை கூட ஊழலின்றி ஆள முடியாதவர் வெளிநாட்டில் பொழுதை கழிக்கிறார்' என்று சாடியுள்ளார்.

**ஒன்றிய அரசுக்கு ஆதரவாக இந்திய ஊடகங்கள்!**

இந்தியாவின் அரசு பள்ளிகளின் அவல நிலை குறித்து கேள்வி எழுப்பியுள்ள அவர், 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை பற்றி பேசும் நாட்டில் மக்களுக்கு என்ன மாதிரியான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று கேட்டுள்ளார்.

உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் பாஜக தலைவர் நிதின் நபின் ஆகியோர் மக்கள் வரிப்பணத்தில் மாம்பழம் சாப்பிடுவதை கிண்டல் செய்துள்ள அவர், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மக்கள் பிரச்னைகளின் போது களத்தில் இல்லாததையும் கேள்வி எழுப்பியுள்ளார். இந்திய ஊடகங்கள் ஒன்றிய அரசுக்கு ஆதரவாக கரும்பலகையை வைத்து பாடம் நடத்துவதாகவும், கடந்த 10ம் தேதியன்று பிரதமர் மோடியுடன் இருப்பது போன்ற செயற்கை நுண்ணறிவு புகைப்படத்தை பகிர்ந்து தனக்கு நடந்த மறக்க முடியாத தருணம் என்றும் பதிவிட்டுள்ளார். இவரது இந்த பதிவு, இந்தியாவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளன.

---

## திருப்பதி கோயிலுக்குச் செல்லும்

# நடைபாதையில் சிறுத்தை நடமாட்டம்!

## பக்தர்களுக்கு அதிகாரிகள் எச்சரிக்கை!

திருப்பதி, ஜூலை 12–

நடைபாதைகள் வழியாக திருமலைக்குச் செல்லும் பக்தர்களுக்காக அதிகாரிகள் சில முக்கிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளனர்.

**அலிபிரி நடைபாதை**

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு செல்லும் அலிபிரி நடைபாதையில் அடிக்கடி வனவிலங்குகள் வந்து செல்கின்றன.

இந்த பாதையில் நரசிம்ம சுவாமி கோவிலுக்கு அருகில் நேற்று இரவு சிறுத்தை ஒன்று நடமாடியது. இதனைக் கண்ட பக்தர்கள் பீதியடைந்து அலறிக் கொண்டு ஓடினர்.

நடைபாதைகள் வழியாக திருமலைக்குச் செல்லும் பக்தர்களுக்காக அதிகாரிகள் சில முக்கிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக இரவில் பயணம் செய்யும்போது, பக்தர்கள் தனியாகப் பயணிக்காமல் குழுக்களாகச் செல்ல வேண்டும்.

**பக்தர்களுக்கு எச்சரிக்கை**

சிறு குழந்தைகளுடன் பயணிப்பவர்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் தங்கள் குழந்தைகளை கவனிக்காமல் விட்டுச் செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டு உள்ளனர்.

வனத்துறை ஊழியர்கள் நடைபாதையில் ரோந்துப் பணியில் ஈடுபடுவதுடன், சிசிடிவி கேமராக்கள் மூலம் வனவிலங்குகளின் நடமாட்டத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

மேலும், பக்தர்கள் எந்தவிதமான பதற்றத்தையும் சந்திக்காத வகையில், பாதுகாப்பு ஊழியர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு திருமலை திருப்பதி தேவஸ்தானம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

**திருப்பதி கோவில்**

திருப்பதி கோவிலில் நேற்று 73265 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 39690 பேர் முடிகாணிக்கை செலுத்தினர். ரூ.4.26 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 30 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

---

## காலத்தால் அழியாத பாடல்களைப் பாடி

# நம் உள்ளங்களில் - இல்லங்களில் நிறைந்தவர் ஜானகி!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, ஜூலை 12– புகழ்பெற்ற பின்னணிப் பாடகர் ஜானகி அம்மையார் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் வருமாறு:**

இசைக்குயில் திருமிகு எஸ். ஜானகி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் முதல் அனிருத் வரை ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடிய கானகோகிலம் ஜானகி அவர்களது இசைப்பயணம் மிக நீண்டது. அவரது மறைவு என்பது, வானொலி தொடங்கி ஸ்பாட்டிஃபை வரையில் அவரது அமுதகானங்களைத் தங்கள் இல்லங்களில் ஒலிக்கவிட்டு இரசிக்கும் தமிழ்நாட்டு மக்கள் உள்ளிட்ட தென்னிந்திய மக்களுக்கும், இந்தியத் திரைத்துறைக்கும் பேரிழப்பாகும்.

இனிமையும் இளமையும் மாறாத தனது குரலால் காலத்தால் அழியாத பாடல்களைப் பாடிய அவர், என்றும் நம் இல்லங்களிலும் நெஞ்சங்களிலும் ஒலித்துக்கொண்டே இருப்பார்.

அவரது மறைவால் வாடும் திரைத்துறையைச் சேர்ந்த கலைஞர்கள், இரசிகர்கள், அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தென்னிந்தியாவின் இசைக் குயில்

# திரையுலகின் மகத்தான பாடகர் எஸ்.ஜானகி மறைவு!

மைசூரு, ஜூலை 12-

இந்திய திரையுலகின் மகத்தான பாடகர் எஸ். ஜானகி காலமானார். அவருக்கு வயது 88. வயது முதிர்வு காரணமாக அவர் மறைந்த தகவலை, சமூக வலைதளத்தில் அவரது குடும்பத்தினர் பகிர்ந்தனர்.

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் உள்ள பள்ளபட்லா என்ற ஊரில் (1938) பிறந்தவர். மூன்று வயதில் தொடங்கி 10 வயது வரை இசை கற்றார். முதல் மேடை நிகழ்ச்சியில் பாடியபோது அவருக்கு 9 வயது.

'விதியின் விளையாட்டு' (1957) என்ற படத்தில் 'பெண் என் ஆசை பாழானது' என்பதுதான் இவர் பாடிய முதல் பாட்டு. அடுத்த நாளே ஒரு தெலுங்குப் படத்தில் பாடும் வாய்ப்பு கிடைத்து. கண்டசாலாவுடன் இணைந்து பாடினார்.

இதைத் தொடர்ந்து பல படங்களில் பாடும் வாய்ப்புக் கிட்டியது. 25 ஆண்டுகளில் தென்னிந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், கொங்கணி, துளு, சௌராஷ்டிரம், இந்தி, வங்காளம், சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 40 ஆயிரத்திற்கும் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார்.

16 வயதினிலே, தேவர் மகன் படங்களில் பாடியதற்காக தேசிய விருது பெற்றவர்.

இவரின் கணவர் ராம் பிரசாத். இவர் கடந்த 1997-ம் ஆண்டு மறைவெய்தினர். இவரது மகன் முரளி கிருஷ்ணா கடந்த ஜனவரி மாதம் மறைந்தார். ஜானகி தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய 5 இந்திய மொழிகளில் சரளமாக உரையாடவும் எழுதவும் தெரிந்தவர்.

17 மொழிகளில் பாடிய ஒரே பாடகி என்ற பெருமை பெற்றவர். அனைத்து இசையமைப்பாளர்களின் இசையிலும், அனைத்து பின்னணிப் பாடகர்களுடனும் இணைந்தும் பாடியுள்ளார். 'இளையராஜா - எஸ்.பி.பாலசுப்ரமணியம் - எஸ்.ஜானகி' கூட்டணி தென்னிந்திய இசைத் துறையில் தனி முத்திரை பதித்தது.

பாடலில் பொதிந்துள்ள உணர்ச்சி மற்றும் நடிகைகளுக்கு ஏற்ற வகையில் குரலை மாற்றிப் பாடக்கூடியவர். குழந்தைக் குரலில் பாடுவதிலும் வல்லவர். இவர் பாடிய 'தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே', 'செந்தூரப் பூவே', 'காற்றில் எந்தன் கீதம்', 'நெஞ்சினிலே நெஞ்சினிலே', 'ராதைக்கேற்ற கண்ணனோ', 'அம்மா.. அம்மா..' போன்றவை காலத்தால் அழியாதவை.

திரைப்படப் பின்னணிப் பாடல்கள், தனிப் பாடல்கள் என பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார். தமிழ், தெலுங்கு மொழிகளில் பல பக்திப் பாடல்களை தானே எழுதி, இசையமைத்துப் பாடியுள்ளார். ஒரு தெலுங்குப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

கலைமாமணி, கேரள மாநில சிறப்பு விருது பெற்றவர். சிறந்த பாடகிக்கான தேசிய விருது 4 முறை, கேரள அரசு விருது 14 முறை, ஆந்திர அரசு விருது 10 முறை, தமிழக அரசு விருது 7 முறை பெற்றவர். இலங்கையில் 1992-ல் இவருக்கு 'ஞான கான சரஸ்வதி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

**மாநில அரசுகளின் விருதுகள்!**

* 1986-ல் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது

* 2002-ல் கேரளா மாநில சிறப்பு விருது

* பதினான்கு முறை கேரள மாநில அரசின் சிறந்த பாடகிக்கான விருது

* ஏழு முறை தமிழ்நாடு அரசின் சிறந்த பாடகிக்கான விருது

* பத்து முறை ஆந்திர மாநில அரசின் சிறந்த பாடகிக்கான விருது

**தேசிய விருதுகள்**

* 1976-ல் பதினாறு வயதினிலே படத்தில் பாடிய செந்தூரப்பூவே செந்தூரப்பூவே பாடலுக்காக தேசிய விருது கிடைத்தது.

* 1992-ல் தேவர் மகன் படத்தில் பாடிய இஞ்சி இடுப்பழகா பாடலுக்காக தேசிய விருது.

* 1980-ல் ஒப்போல் என்ற மலையாள படத்தில் பாடிய எட்டுமனூரம் பழத்தில் பாடலுக்காக தேசிய விருது.

* 1984-ல் சித்தாரா என்ற தெலுங்கு படத்தில் பாடிய வென்னெல்லோ கோடாரி அந்தம் பாடலுக்காக தேசிய விருது.

**பத்ம பூஷண் விருது மறுப்பு!**

எஸ்.ஜானகி 2013 ஆம் ஆண்டு தனக்கு கிடைக்கவிருந்த பத்ம பூஷண் விருதை ஏற்க மறுத்து விட்டார். இவ்விருது தனது 55 ஆண்டு கால அனுபவத்திற்கு தாமதமாக வந்துள்ளது என கூறிவிட்டார்.

'காற்றில் ஜானகியின் கீதம்...' எப்போதும் உலகோடு இரண்டறக் கலந்திருக்கும். எங்கோ, எவர் செவியிலோ கேட்டுக் கொண்டே இருக்கும்.

---



திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் தலைவராக இருந்து மறைந்த அண்ணாதாசன் என்கிற டி.எஸ்.மாரிமுத்து அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் நகர செயலாளர் ஆர் .எஸ். பாண்டியன் தலைமையிலும் நகரமன்ற தலைவர் கவிதா பாண்டியன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண் சா.மணி, சிக்கந்தர் மற்றும் மாவட்ட,நகர,ஒன்றிய கழக நிர்வாகிகளின் முன்னிலையிலும் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. முகில் ராஜேந்திரன், நல்நூலகர் ஆசைத்தம்பி,பிரபாகரன்,எம்.பி.எடிசன், வசந்த் மற்றும் பலர் நிகழ்வில் பங்கேற்று மலரஞ்சலி செலுத்தினர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு,மாவட்ட துணை அமைப்பாளர் எஸ். வெங்கடேசன் தலைமையில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு ஆந்திர மகிளா சபாவில் அறுசுவை உணவு வழங்கினார். இதில் பகுதிச் செயலாளர் எஸ். முரளி,மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு, துரை பார்த்திபன், எஸ்.சரவணன், அருண் இராம ஜெயம்,அசோக் குமார், பிரவீன்,பி. கோவிந்த், ஜெகதீஷ் கே.ஆர்.குமார்,காசி பாண்டி,கே.தங்கம், ஆர்.நாகலிங்கம்,க. இராமதாஸ், ஏழுமலை,என்.பால விக்னேஷ்,மயிலை மகேஸ்வரி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.